# *திருப்பாவை உவமைகள்*

**By Sri N.S. Padmanabhan Swami**
**(alias Vanamamalai Padmanabhan)**

**16 December 2016 to 14 January 2017**

*திருப்பாவை உவமைகள்* *ஒன்று*

*அந்தகாரத்தில் தீபம் போலே*

இடக்கை வலைக்கை அறியாத ஆய்ப்பாஇயில் வீங்கிருள்வாய்ப் பூண்டு கண்ண் உய்வித்தபடி

கண்ணனின் நீர்மை ஆய்ப்பாடிக்கு விளக்கு போல..இது இருளில் ஒலி போல
🌽
*அந்தகாரத்தில் தீபம் போல*
மூவாயிறப்படி ..சீர்மல்கும் ஆய்ப்பாடி
🌽
*ஒரு மேகத்தில் இரண்டு தாமரைப் பூத்தார் போல்*

கண்ணைன் கண்கள் ஒரு மேகத்தில் இரண்டடு நிலவு உதித்தாற் போல்

இவன் சௌலப்யம் ஆய்ப்பாடியை உய்த்தபடி சொல்லுகிறது

இராத்திருனாள் கண்டாற் போலே

ஆறாயிரப்படி.. செங்கண்

🌽 *இருள் தேட்டமாப் போலே நிலா தேட்டமாயிற்று*

கோபர்களுக்கும், காதலர்களுக்கும் இருள் விருப்புமாப் போலே,

இவர்களுக்கு,கோபிகைகளுக்கு நிலா தேட்டம்

இருளன்ன மாமேனி என்று அன்று அச்ழ்வார்க்கு இருள் தேட்டம்

நள்ளிருட்கண் உய்த்திடுமின் என்று ஆண்டாளுக்கு அன்று இருள் தேட்டம்.

வாழி கணை இருளே என்று இருளைக் கொண்டாடினார் வில்லிதாசர்

இவர்களுக்கு நிலா தேட்டம் இன்று

ஆறாயிரப்படி.. *மதி நிறைந்த*

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

# *திருப்பாவை உவமைகள் II*

*குடி கட்டிக் க்ரிஷி பண்ணுவாரைப் போலே*

உழவர்கள் விளை நிலத்தின் அருகே குடில் கட்டி பயிரை பாதுகாத்து விளைச்சல் எடுப்பர்கள்.
பக்தி உழவனான் எம்பெருமான், ஷீராப்தியில் வந்து நாகணை மிசை உன்னிய யோகத்திருந்து நம்மை ரக்ஷிக்கும்படி சொல்லுகிறது. அதாவது, ரக்ஷண சிந்தையுடன் பரமபதத்திலிருந்து திருப்பாற்கடல் வந்து இருப்பது *குடி கட்டிக் க்ரிஷி பண்ணுவாரைப் போலே*
என்று ஸ்ரீ நாயனார் திருவாக்கு.

திருப்பாவை..இரண்டாம் பாட்டு *ஆறாயிரப்படி*

*உண்ணப் புக்கார் வாயை மறந்தாப் போலே*

விஸ்வாமித்திரர் பெருமாளையும் , இளைய பெருமாளையும் எழுப்பப் புகுகையில், அதை மறந்து இவர்கள் வடிவழகில் மயங்கி கௌசல்யா சுப்ரஜா என்றாரிறே!

நோன்பு நோக்க புகுந்த ஆய்ப்பாடிப் பென்களும்
நோன்பை மறந்து, திருப்பாற்கடலில் கண்வளரும் அழகில் மயங்கி

*பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்*என்று ஸ்லாகித்துப் பாடுவது, உணவு உட்கொள்ள வந்தவர்கள் வாயை மறந்தால் போலாயிற்று என்று ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் *ஆறாயிறப்படி*

தாசன்
வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் மூன்று***

*தூது போ! என்னலாம்படியான க்ருஷ்ணனைப் போலே*

*வள்ளல் பெரும் பசுக்கள்.

வள்ளல்தனமாவது தன்னக் கொடுத்து நிற்கை.

பசுக்கள் தம்மையே கொடுக்கும் தனமையை ஒப்பற்ற ஒப்பீட்டினால கொடுத்தருள்கிறார் ஸ்ரீ அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்.

கண்ணன் கழுத்திலே ஓலைகட்டி தூது போய் தன்னையே கொடுத்தருளினானிறே!
அப்படி, தூது போ! என்னும்படி இந்த பசுக்களின் வள்ளல் தன்மை. நம் ஆசார்யர்களுக்கு அவன் நீர்மையே எங்கும் புலப்படும்.

வள்ளல் பெரும் பசுக்கள்.. ஆறாயிரப்படி

*தூங்கு மெத்தையிலே உறங்கும் ராஜபுத்திரர்களைப் போல*

வண்டுகள் குவளைப் பூவில் உறங்குவது,
*தூங்கு மெத்தையிலே உறங்கும் ராஜபுத்திரர்களைப் போல*இருக்கும்.

பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப
ஆறாயிரப்படி

*முத்துக்கு முக்குமவர் கடலுக்கு அஞ்சாதாப் போலே*

தேங்காதே புக்கிருந்து..
அதாவது, கடல்.போல் பால் வெள்ளம பெருகும்.கறக்கயில் அஞ்சும்படியாயிருக்கும் பால் வெள்ளம்.

முத்தெடுக்க முங்குபவர்கள் கடலுக்கு அஞசாதாப் போல் இங்கு கறப்பவர்கள் நிலை

ஆறாயிரப்படி

தாச்ன்
வானமாமலை பத்மனாபன்

---

# *திருப்பாவை உவமைகள்*... நான்கு

*திருவடி பிராட்டியைக் கண்ட ஹர்ஷத்தாலே சப்தித்து வந்தாப் போலே*

*ஆர்த்து*
ஆறாயிரப்படி
பிராட்டியை கண்டு மீள்கையில் திருவடி அளவற்ற மகிழ்ச்சியுடன்
ஆர்வாரம் செய்தாற் போலே, மேகம்
நின்றதிர்ந்து முழங்கப் பாரிக்கிறார் ஸ்ரீ ஆண்டாள்..நான்காம் பாசுரத்திலே

*கருவடைந்த பயிர் போலே*

ஊழிமுதல்வன் உருவம்போல் மெய் கருக்க வேண்டும்.

இது பயிர்கள் விளைந்து அறுப்புச் சமயத்தில் கருமையாய் விளங்கும்.
அதற்கு ஒப்பச் சொல்கிறார். ஸ்ரீ நாயனார்.

*விண்ணீள மேலாப்பு விரித்தாற் போல்*

ஆர்த்தி *ஏறி*

வானத்திலே ஒரு பந்தல் விரித்தாற் போல் மேகங்கள்.மேலே படர
வேண்டும்.

ஆறாயிரப்படி

தாசன்
வானமாமலை பத்மனாபன்

---

# <u>திருப்பாவை உவமைகள் V</u>

*விரஜையைப் போலே*
ஆறாயிரப்படி

தூய பெரு நீர் யமுனை

பரமபதத்துக்கு விரஜையைப் போலே , இங்கே தூய பெரு நீர் யமுனை.

*நெருப்பில் இட்ட.பஞ்சு போலே*

நெருப்பில் இட்ட பஞ்சு போல் தீயினில் தூசாகும் ,
அதாவது வினைகள் பொசுங்கும் என்றபடி.

ஆறாயிரப்படி

*பாலும் கண்ட சர்க்கரையும குடிக்கப்ꢀ பித்தம் தன்னைடையே போமா போலே*

மூவாயிரப்படி

இனிப்பு கலந்த பால் அருந்தினால் பித்தம் தன்னடையே போவது போல்,
பகவத் அனுபவத்தால் வினைகள் தன்னடையே மறையும் என்றபடி

தாசன்
வானமாமலை பத்மனாபன்

---

## திருப்பாவை உவமைகள் ...VI

*கர்ப்பிணிகள* *ப்ரஜைகளுக்கு நோவு* *வாராமே *எழுந்திருக்குமாப்*
*போலே*

கர்ப்பிணிகள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு ஏதும் தீங்கு வாராமைக்காக நிதானமாக எழுந்திருப்பது போல், முனிவர்களும் யோகிகளும் ஹ்ருதயத்தில் இருக்கும் ஹ்ரிக்கு தீங்கு வாராமைக்காக மெல்ல எழுந்திருப்பர்கள்.

மூவாயிரப்படி..மெல்ல எழுந்து

*நாழிகை வட்டில் நீர் நிரம்பினவாரே கீழே விழுமாப் போலே*

ஆறாயிரப்படி.... புள்ளும் சிலம்பினகாண்

அக்காலத்தில் சமயம் தெரிவிப்பதற்காக அதற்குரிய வடிவமைத்த பாத்திரத்தில் நீர் சொட்டிக்கொண்டிருக்கும்.அது நிறைந்தவுடன் கீழே விழும், அது போல் பறவைகள் தவறாமல் எழுந்து தங்கள் அன்றாட செயல்களுக்கு புறப்பட்டன.

*படுக்கைக்குக் கீழே வெள்ளம் கோத்தாப் போலே*

மூவாயிரப்படி.....உள்ளம் புகுந்து குளிர்ந்து

படிக்கைக்குக் கீழே நீர் நிரம்பினால் அவ்விடத்தையே குளிர்விக்கும்.

அது போல், கண்ணனை பிரிந்திருக்கும் இவர்கள் தாபம் தீரும்படி *அரி* என்ற பேரரவம் உள்ளம் குளிர்விக்கும்

குறிப்பு...அக்காலத்தில் படுக்கைக்கு கீழே தண்ணீர் சுற்றி நிறைந்திருக்கும்படி ஆவன செய்திருப்பார்கள்.இது இயற்கையாக குளிர்ச்சி தரும்.இன்றும் புராதான பெரிய கோட்டைக்குச் சென்றால் காணலாம்.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

<u>**திருப்பாவை உவமைகள் VII**</u>

*மலை தேய்க்கும் ஒலி என்னுமாப் போலே*

மத்தினால் ஓசைப் படுத்த தயிரரவம்..

ஆய்ச்சியர்கள் மத்தினால் தயிர் கடையும் சப்தம்

எம்பெருமான் மந்தர மலையைக் கடைகையில்
எழுந்த ஒலி போலிருந்ததாம்

இது திருவாய்மொழி ஆழியெழ பாசுரத்தில் ஆழ்வார் வர்ணித்தது போல்.

*மந்தரத்தால் கடல் கடைந்தாற் போலே*

ஆச்சியர்கள்.மத்தினால் கடைவது அன்று பெருவடிவில்கடலமுதம்
கடைந்தது போன்று என்றபடி.

*மலையில் இருப்பாரைப் போலே*

தயிர் கடைகையில் கண்ணனிடத்தில் பிரிவு இருப்பதால் ,அவன்
சௌலப்யாதி குணங்களுடன் திருவாய்ப்பாடி வந்தாலும், இவர்களுக்கு
பிரிவால் அது எட்டாத மலை மேல் இருப்பதாக தோற்றுகிறபடி.

தாசன்
வானமாமலை பத்மனாபன்

---

## திருப்பாவை உவமைகள் எட்டு

*பெண்ணின் வருத்தம் அறியாதவன் போலே*

பாவாய் எழுந்திராய் என்று அந்த.இடைப்பெண்ணின் கதவை தட்டியும் பதில் வாராதது ஸ்ரீ ஆண்டாள் கோஷ்டிக்கு மிக துன்பம் விளைத்தது.

தங்கள் வருத்தத்தை உணராமல் இருப்பதற்கு

பெண்ணின் வருத்தமறியாதவன் போலே என்று உவமை இடிகிறார் ஆறாயிரப்படியிலே.

*போகை தானே உத்தேஸ்யமா போலே*

க்ருஷ்ணானுபவத்திற்காக நோண்பு என்ற வ்யாஜ்யத்தால் இடைப்பெண்கள் ஓரொருத்தராய் நாடிச் சென்று எழுப்புமிவர்கள், அதுவே ப்ர்யோஜனம் போலே இந்த சம்ஸ்லேஷ்த்தை ரசிப்பது, இதுவே ப்ர்யோஜனமாம் போலே இது எப்படியென்னில விரும்பி ் ஒரு இடத்தை நோக்கிப்.போகையில் போகும்.வழியும் கூட வருபவர்களும்.தேட்டமாமிறே!

*உன்னக் கூவுவான் வந்து நின்றோம்*

ஆறாயிரப்படி

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

# திருப்பாவை உவமைகள் IX

*இளைய் பெருமாளைப் போலே*

தூமணி மாடத்து அவதாரிகை

இந்த.இடைப்பெண் கண்ணன் வரவில்லை என்று கவலைப் படவில்லை. காரணம் ஆத்ம ஸ்வரூபம் என்னவென்று உணர்ந்தாள்.அதாவது, எம்பெருமான் தான் ஆத்மாவைப் பெற யத்தனிக்க வேண்டும்.

ஆனால், வெளியே அவளை எழுப்ப வந்தவர்களும் ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்தவர்களதானே்.எனினும் கண்ணனைக் காண வேண்டும் என்ற.த்வ்ரை மிகுதியால் ஆதங்கப்படுமவர்கள்.

அதைதான்,
ஆறாயிர்ப்படியில் ..இளைய.பெருமாளைப் போலே என்பது இங்கு நோக்க.வேண்டும்

*பிராட்டியைக் கைப்பிடித்துக்கொண்டு பெருமாள் உலாவினாற் போலே*

சித்ரகூடத்திலே எப்படி பெருமாள,் பிராட்டி கைப்பிடித்துக்கொண்டு ஆனந்தமாய் உலாவினாற் போலே

இங்கு தூபம் கமழ சுற்றும் விளக்கெரிய இருந்தபடி.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் ..பத்து***

*பரசுராமனை வென்று பெருமாள் அவன் கையாலே வில்லை வாங்கினாற் போலே*

தோற்றும் உனக்கே பெரும் துயில் தான் தந்தானோ...ஆறாயிரப்படி

ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகன் ஸ்ரீ பரசுராமரை வென்று வில்லை வாங்கியது போல், இப்பெண்ணும் கும்பகர்ணனிடம் துயிலை வாங்கினாள் என்றபடி.

*ஹாரத்தைப் பண்ணி அதற்கு கல் அழுத்தினாற் போலே*

அருங்கலமே..மூவாயிரப்படி

எப்படி ஒரு கல் ஹாரத்துக்கு நடு நாயகமாய் விளங்கி அழகு சேர்க்குமா போலே, இப்பெண்ணை அருங்கலமே என்று அழைக்கிறார்கள்.

*தண்ணீர் குடிக்க காலின ஏரொயிலே தலை கீழே விழுந்து சாவாரைப் போலே*

கூற்றத்தின் வாய் வீழ்ந்த ..மூவாயிரப்படி

எப்படி நீர் பருக ஏரியை நாடுபவன் தலை கீழே விழுந்து மாள்கையோ, அப்படி பெருமாளை எதிர்க்க வந்த கும்பகர்ணன் மாண்டு போனான்

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் 11***

*கீழ் நோக்கி வயசு புகுமாப் போலே*

ஒவ்வொரு நாளும் இவ்வுலகில் வயது கூடிக் கொண்டு போகும்.

கண்ணன் ஸ்பர்ஸத்தால் இந்த கறவைகள் கன்று போலிருப்பது , அவற்றுக்கு கீழ் நோக்கி வயசு புகுதல் போலிருக்கிறது.

கற்றுக் கறவைகள்..

*ஈஸ்வரன் ஒருவனே ஸர்வாத்மாவுக்கும் நியாமகன் போலே*

பல கறந்து ..ஆறாயிரப்படி

எப்படி எம்பெருமான் ஒருவனே அணைத்துக்கும் நியந்தாவாய் இருப்பது போல், இந்த கோபிகை ஒருவளே எல்லாப் பசுக்களையும் கறக்கிறாள் என்றபடி.

*புனமயில் சிறப்பிக்குமாப் போலே*

புனமயிலே போதராய்

எப்படி தோகையுடன் மயில் சிறப்பிக்கிமோ அப்படி இந்த கோபிகையும் இந்த கோஷ்டியை சிறப்பிக்கிறாள்.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

**திருப்பவை உவமைகள் 12**

**நீரிலே நெருப்பு எழுந்தார் போலே**
சினத்தினால்..ஆறாயிரப்படி.

எம்பெருமான் இயல்பிலே சாந்தமானவன்.நீர,எப்படி குளிர்ச்சியாக இருக்குமோ, அப்படிப்பட்ட நீரும் கொதிக்கும்படி அபச்சாரம் பொறுக்கவொண்ணாமல் நீரிலே நெருப்பு எழுந்தார் போல் சினம் கொண்டான் எம்பெருமான் என்றபடி.
**கொண்ட சீற்றம்** என்று கலியன் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

**திரிஜடை பிராட்டிக்கு அடிமை செய்தாற் போலே**

நற்செல்வன் தங்காய்..ஆறாயிரப்படி

எப்படி ஶ்ரீ விபீஷ்ணாழ்வானும் , திரிஜடையும் பெருமாளுக்கும், பிராட்டிக்கும் கைங்கரியம் செய்தாற் போல், இந்த் நற்செல்வன் தங்காய் இருந்தாள் என்றபடி.

**ஆஸ்ரிதர் கார்யம் செய்யப் பெறாவிட்டால் ,ஈஸ்வரனுக்கு நிரம்ப வருத்தமாம் போலே**

கணைத்து..ஆறாயிரப்படி

எப்படி அடியார்களுக்கு காரியம் செய்யாவிட்டால் எம்பெருமானுக்கு வருத்தமோ, அப்படி கறக்கர்விட்டால் பசுக்களுக்கு இருக்குமாம்.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

**<u>*திருப்பாவை உவமைகள் 13*</u>**

*உடலையும் உயிரையும் பிறித்தார் போல்*
பொல்லா அரக்கன்..ஆறாயிரப்படி

ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான், ஸ்ரீ விபீஷ்ணாழ்வான் போல் நல்ல அரக்கர்கள் உண்டிறே.

இங்கு சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்ததால் கொடுமயில் கடுவிசை அரக்கன்.

இது உடலையும் உயைரையும் பிரித்தது போல் கொடுமையிறே!

*மேல் எழுத்திட்டுக் கொடுத்தார் போல்*
கீர்த்திமை பாடி..ஆறாயிரப்படி

ராவணன் பெருமாள் வீரத்தில் தோற்றான்.அவன் தங்கை வடிவழகில் தோற்றாள்.அவன் தம்பி குணங்களில் தோற்றார்.

இப்படி தோல்வியை மேல் எழுத்திட்டுக் கொடுத்தார்களிறே!..

*பூவிலே வண்டு இருந்தாற் போலே*
மூவாயிரப்படி..போதரிக் கண்ணினாய்

இவள் கண் பூவில் வண்டு இருப்பது போலழகு

தாசன்

வானமாமலை பத்மனாபன்

**திருப்பவை உவமைகள்...14**

**சந்திராதித்தியர்கள் சேர உதித்தாற் போல்**

பங்கயக் கண்ணான்..ஆறாயிரப்படி

இரவில் சந்திரனும், பகலில் சூரியனும் உதிப்பது இயற்கை. இரண்டும் ஒரு சேர உதிப்பது காண இயலாது.

கண்ணன் திருமுகத்தில் இருக்கும் திருக்கண்களோ

சந்திரன், சூரியன் இருவரும் ஒரு சேர உதித்தார் போல் இருப்பதாக ரசமாக உரைக்கிறார் ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

இதை அபூத உவமை என்று தமிழ் இலக்கணம் கூறும்.

அபூத உவமை...இயற்கையாய் இல்லாத ஒன்று.

பூதம்..இயற்கை.அபூதம்.இயற்கையில் இல்லாதது

குறிப்பு..எரிகொள் சென்ஞாயிறு இரண்டுடனே உதயமலர் வாய் விரிகொள் வண்ணத்து எம்பெருமான் கண்கள்.. திருவிருத்தம் 82

ஏக காலத்திலே இரண்டு சூரியன்கள் போலே -அபூத உவமை ஆழ்வார் சொல்லியருள்வது ஈண்டு
இங்கு நோக்கத்தக்கது

தாசன்

வானமாமலை பத்மனாபன் 23:57

***திருப்பாவை உவமைகள் 15***

*திருவாய்மொழப் பாட நின்றால் செல்வர் எழுந்தருளுகையும் அஸஹ்யமாம் போலே*

ஆறாயிரப்படி...சில்லென்று அழையேன்மின்

திருவாய்மொழி பாட நின்றால் செல்வர் எழுந்தருளினாலும், அது ஒரு தடையாக, தடுப்பாக, இடைஞ்சலாக நோக்குமா போலே,

இந்த இடைப்பெண் க்ருஷ்ணானுபவம் பண்ணா நிற்க, இவர்கள் கோஷ்டிக்கு அழைப்பது
இடைஞ்சலாக தோன்றுகிறது என்றபடி

தாசன் - வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் 16***

*தண்ணீர் பந்தலையும் கடையையும் கட்டுமாப் போலே*

தண்ணீர் பந்தல் வைக்கும் தார்மீகர்கள், தண்ணீர் பந்தல் மட்டுமல்ல, அதற்கு மேல் தோரணம் கட்டி எல்லோருக்கும் தெரியும்படி, ஏன் சறிது தொலைவிலிருந்து கூட படிக்கலாம்படி
தண்ணீர் பந்தல் என்று பெரிதாக வடிவமைத்திருப்பார்கள்.தாகத்துடன் வருமவர்கள் அதைப் பார்த்தவுடன் சற்றே ஆறுதல் அடைவர்கள்.

கண்ணன் மீது தாகம் கொண்டவர்கள் நந்தகோபர் திருமாளிகையின் மேல் இருக்கும் *கொடித்தோரணம்* தொலைவிலிருந்து கண்டு

இதோ வந்துவிட்டது நம் கண்ணிடம், இதோ நம் தாபாம் தீரும் என்று மகிழ்வர்கள் என்றபடி

கொடித் தோரணம்....ஆறாயிரப்படி

*கம்ஸன் படை வீட்டில் எல்லாம் ப்ரெதிகூலமாய் இருக்குமாப் போலே*

நேச நிலைக்கதவம்..மூவாயிரப்படி

இங்கு கதவுக்கு *நேசம்* என்று அடைமொழி இடுவானேன்?

எப்படி கம்சன் வீட்டில் எல்லாமே எதிராய்த் தோன்றுமா, இங்கு எல்லாமே அன்பாய், ஆதரமாய் இருக்கும் என்றபடி

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

# ***திருப்பாவை உவமைகள் 17***

*பிராட்டி* *ஸர்வேஸ்வரனையும*ஃ, *விபூதியையும் கைவிடாதே*
*இருக்குமாப் போலே*..
ஆறாயிரப்படி...கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே.

யசோதைப் பிராட்டி நந்தகோபருடைய படுக்கைத்தலையும் விடாள்;ஃ
பிள்ளைகளுடைய தொட்டில் காற்கடையும் விடாள்.

அதாவது, பர்த்துரு சங்கமும், பிள்ளைகள் பக்கல் வாத்ஸல்யமாகும்.

இதைத்தான், எப்படி பிராட்டி எம்பெருமானுடன் அகலகில்லேன் என்று
நித்யசம்பந்தத்தோடு இருக்குமாப் போலே, அதே சமயத்தில்
ஜீவாத்மாக்களுக்கு புருஷ்காரபூதையாய் திகழுமாப் போலே என்று
தெரிவிக்கிறார் ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

*நீர் வஞ்சிக் கொம்பு போலே*

திருப்பாவை ஸ்வாபதேசம்...கொம்பனார்கெல்லாம் கொழுந்தே..

எப்படி பெரிய மரங்கள் விழுந்தாலும், நீர் வஞ்சிக் கொடிகள் வளைந்து
பிழைக்குமா போலே, சம்ஸாரிகளுடைய அபிமானத்துக்கெல்லாம்
அனுகுணமாய் அமைத்துக்கொள்ளும் திருமந்திரத்தைச் சொல்லுகிறது.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

## திருப்பாவை உவமைகள் 18

*பிராட்டி, பெருமாள் தோள் வலியை நினைத்து அச்சம் கெட்டிருக்குமாப் போலே*

ஆறாயிரப்படி...ஓடாத தோள் வலியன்

எப்படி பிராட்டி பெருமாளின் தோள் வலிமை அதாவது சௌர்ய வீர்யாதிதகள் நினைத்து, மனத்திடம் பெற்று இருந்தாற் போலே,

திருவாய்ப்பாடியிலுள்ளோர் ஸ்ரீ நந்தகோபரின் தோள் வலி கண்டு நிஸ்சிந்தையாக இருந்தார்கள் என்றபடி.

*கிண்ணகத்தில் அணை செய்தாற் போலே*
மூவாயிரப்படி...கடை திறவாய்

எப்படி வெள்ளம் வந்தால் அணை அதைத் தடுத்து மதகுகள் இட்டு அடைதிருப்பது போல்,

மதகுகள் திறந்தால் கால்வாய்க்ளுக்குச் சென்று எல்லோருக்கும் பயன்படும்படி , க்ருஷ்ணானுபவம் எல்லோருக்கும் கிட்ட கடை திறவாய்.

*முக்தனுக்கு ஸம்சாரம் போலே*
ஆறாயிரப்படி....நந்த்கோபன் மருமகளே! நப்பினாய்!

புக்ககத்துக்குச் சென்றாலும் , பிறந்தகத்துப் பற்று உண்டிறே.

நப்பின்னைக்கு அப்படி இல்லாமல் நப்பின்னைக்கு புக்கிடமே நிலைத்து பிறந்தகம் நினைப்பதில்லை என்பதை குறிக்க நந்தகோபன் மருமகளே என்பது நோக்க

இது எப்படியெனில், முக்தி பெற்ற ஆத்மா சம்சாரத்தை வாசனையோடு அறவே மறந்தாற் போல் என்னும் உதாஹரணம்இங்கு நினைக்க

தாச்ன்

வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் 19***

*புத்திராதிகள் துகையாகத படுக்கை பித்ராதிகளுக்கு அஸஹ்யமாப்போலே*

ஆறாயிரப்படி..மெத்தென்ன பஞ்ச சயனத்தின் மேலேறி

குழந்தைகள் துகைத்துண்டு நுகராத படுக்கை பஞ்சு பொல் மென்மையாக இருந்தாலும் ரசிக்காதிறே.

வெம்பள்ளி ஆகிவிடுமென்றபடி.

*நஞ்சுண்டாரப் போலே பரவசனாய்* ஆறாயிரப்படி....நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த

நஞ்சு உட்கொண்டார் மயக்க நிலையில் செய்வதுணராது இருப்பர்.

கண்ணபிராண் நப்பின்னையுடன் ஆலிங்கனத்துடன் இருக்கும் இருப்பைச் சொல்லுகிறது நஞ்சுண்டாரைப் போலே, என்று

*காலம் அலர்த்துமாப் போலே*

கொத்தலர் பூங்குழல்...மூவாயிரப்படி

காலம் எப்படி மலர்களை அலர்த்துமாப் போலே, நப்பின்னை குழலில் உள்ள் பூங்கொத்து ப்ர்ணய கலஹத்தில் மலருகிறது என்றபடி.

க்ருஷ்ணன,் இவள் முன்னே போய் திறக்கலாகாது என்று இவளை தடுக்க அணைத்த ப்ரணயகலஹம்

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

**<u>*திருப்பாவை உவமைகள் 20*</u>**

*செப்புக்குள்ளே பொதிந்த ஆபரணம் பூணக் கிடையாதாப் போலே*

செப்பன்ன மென் முலை நப்பின்னை..ஆறாயிரப்படி

இக்காலத்தில் வங்கி லாக்கரில் நகைகள் வைத்துப் பாதுகாக்கப்டுகிறது.ஆனால், அணிந்து கொள்ள வேணுமெனில் மீண்டும் வங்கிக்குச் சென்று எடுத்து வந்து அணிய வேண்டும்.

அக்காலத்தில் செப்புக்குள்ளே பொதிந்து வைத்துப் பாதுகாப்பார்கள் போலும்.எடுத்து அணிவதற்கு சிரமம்.

கண்ணன் என்னும் ஆபரணம் பாதுகாப்பாக நப்பின்னை என்னும் செப்புக்குள்ளே இருந்தாலும், வெளியே எடுப்பது சுலபமில்லை போலும்.

*பெருமாள் ஐயர் பண்ணி வைத்த விவாஹம் என்று உகப்பர்*

மூவாயிரப்படி..எம்மை நீராட்டு

சக்கரவர்த்தித் திருமகன் பிரட்டியுடன் விவாஹம் ஸ்ரீ தசரத சக்கரவர்த்தியும் பெரியோர்களும் ஆதரித்து ஆசியுடன் நடந்தது என்று உகப்பர். பிராட்டி வடிவழகுக்காக் இல்லை இந்த உகப்பு.

அது போல் கோபிகைகளுக்கு, க்ருஷ்ணானுபவம் , போர உகப்பது கண்ணனுக்காக இல்லை,

இது ஸ்ரீ நப்பின்னை பிராட்டியால் கிடைத்ததாலே என்று உகப்பு. இங்கு பிராட்டியின் புருஷகாரத்தில் நோக்கு

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

## திருப்பாவை உவமைகள் 21

*பரமபதம் போலேயும், நாராயணத்வம் போலேயும், தான் தோன்றி அன்றிறே இது.*..

ஆற்றப் படைத்தான் மகனே...மூவாயிரப்படி

பரமபதமோ அவனுக்கு நிருபாதிகமான் சொத்து.

அப்படி அன்றிக்கே, இந்த நந்த கோபனுடைய சொத்து இவன் அனுபவிப்பதற்காக் திருவவதாரம் எடுத்திருக்கிறான் என்றபடி.

ஆற்றப் படைத்தான் மகன் என்பதால் இங்கு இந்த செல்வங்கள் இவன் தந்தை அடியாகக் கிட்டி திருவவதரித்து அனுபவுக்கிறான்.

அங்கு நாராயணன், சர்வ ஸ்வாமி என்பது அவனுக்கு இயல்பாக இருக்கும் சொத்தை காடுகிறது.

இங்கு ஆற்றப் படைத்தான்
மகன் என்பதால், வந்தேறி என்பது தோற்றுகிறது.

*மாற்றார் தங்கள் வலி மாண்டு விழுமாப் போலே*
மாற்றார் வலி தொலைந்து ..மூவாயிரப்படி

எதிரிகள் தங்கள் வீரம் இழந்து உந் சௌர்யாதிகளில் தோற்கிறார்கள்.

நாங்கள் உன் கல்யாணகுனங்களில் தோற்று அடி பணிகிறோம்

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் 22***

*ப்ராஹ்மணப் ப்ர்ஜை வேடருடைய க்ரஹத்திலே பால்யத்தில் அகப்பட்டு, புத்தி வ்ருத்திகள் அவர்கள் படியாய் செல்லா நிற்க, சுக்ருத விசேஷத்தாலே மாதாபிதா முன்னே வந்து நிற்குமாப் போலே*

வந்து தலைப் பெய்தோம்....ஆறாயிரப்படி

ஆத்மா, கர்ம வசத்தாலே பல பிறவிகள் எடுத்து, மறந்தேன் உன்னை முன்னம் மறந்த மதியின் மனத்தால் என்றபடி ப்ரக்ருதி சம்பத்தத்தில் மூழ்கி, அதன் படியிலே உழன்று கொண்டிருக்கும் வேளையில், எம்பெருமானின் க்ருபா கடாக்ஷத்தால் , திவ்ய தம்பதிகள் வந்து நின்றால் எப்படி இருக்கும்?

சிறு வயதில் ஒரு ப்ராஹ்மணக் குழந்தை விதி வசத்தால் மாதா பிதாவைப் பிரிந்து, வேடர் குலத்தில், அவர்கள் பழக்க வழக்கத்தில் வளர்ந்து, ஒரு நாள் திடீரென்று சுக்ருதத்தச்ல் தன்னுடைய மாதா பிதாவின் முன் நிற்குமாப் போலே ஆயித்து இந்த ஆத்மாவின் நிலை என்றபடி

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

## திருப்பாவை உவமைகள் 23

*கடற்கரையில் வார்த்தை போலேயும், தேர்தட்டிலே வார்த்தை போலேயும்*

சீரிய சிங்காசனத்திலிருந்து ...ஆறாயிரப்படி

கண்ணனை சீரிய சிங்காசனத்தில் இருக்கும்படி ப்ரார்த்திக்கிறார்கள், மாரி மழை முழஞ்சில் பாசுரத்தில்.

அது என்ன சீரியது?

இது சக்கரவர்த்தித் திருமகன் வானர சேனையிடம் கடற்கரையில் பேசியது போலவும்,

ஸ்ரீ க்ருஷ்ணன் தேர்தட்டிலே அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணியது போலவும்,

இவர்களுக்கு சீரிய சிங்காசனம் இருப்பது என்றபடி.

*வர்ஷ காலம் ராஜா படைவீடு விட்டு புறப்படாப் போலே*
மூவாயிரப்படி....மாரி மழை முழைஞ்சில் மன்னிக்கிடந்து.

சிம்ஹங்கள் மாரி காலத்தில் தங்கள் குகையிலிருந்து வெளி வராமல் அங்கேயே பொருந்தி இருப்பது,

ராஜாக்கள் மழை காலத்தில் வெளியே செல்லாமல் அரண்மனையிலேயே இருப்பது போல் என்ற ஒப்பீடு

தாசன்

வானமாமலை பத்மனாபன்

## *திருப்பாவை உவமைகள்* 24

*மதிளுக்கு மதிள் இடுமாப் போலே*
திறல் போற்றி..மூவாயிரப்படி

*அரணமாவர்* என்று எம்பெருமானே பெரிய மதிள்.
அவனுக்கு அடி போற்றி, திறல்,ீபோற்றி என்று மங்களாசாசனம் பண்ணி பல்லாண்டு பாடுவது,

மதிளுக்கு மதிளிடுவது போல் என்று ரசமாகத் தெரிவிக்கிறார் உரைப்பேரரசர்.

*புலி கிடந்த தூற்றிலே சென்று தட்டி எழுப்புவாரைப் போலே*
சென்றங்குத் தென்னிலங்கைச் செற்றாய்.....ஆறாயிரப்படி

*Beheading the lion in its own den*

காட்டில் தேடிச் சென்று புலி குகைக்குள் சென்று , அதைத் தட்டி எழுப்பி வதைக்குமாப் போல்,

பெருமாள்

மும்மதிள் இலங்கை கடந்து புக்கு, கடல் , மலை , காடு, கோட்டைகள் தாண்டி,
ராவணன் எனும் பயலை கொன்று பொகட்டான் என்றபடி.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் 25***

*நாய்க் குடலுக்கு நறுநெய் தாங்காதாப் போலே*

ஓரிரவில் ஒருத்தி மகனாய்...ஆறாயிரப்படி

நல்ல நெய் உட்கொண்டாலும் நாய்க் குடலுக்கு ஒவ்வாதாப் போலே

எம்பெருமானாய் வந்து தேவகிக்கு மகனாய் திருவவதரித்தும், அது தங்காமல்,

அவ்விரவே அவர்களை நீங்கிவிட்டுச் சென்றது அறிகிறோம்.

பெற்றும் பேரிழந்தாள் தேவகி.இங்கு தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் ஸ்ரீ குலசேகராழ்வார் பாசுரம் நினைக்கத்தக்கது.

Ps. I don't know how Sri nayanar knew intricate canine food preferences
My google search in quota yielded this

Just remember not to give him sugar, salt, oil, *ghee*, onion, garlic or any other masala ever.

Nayanar Rocks

தாசன்
வானமாமலை பத்மனாபன்

---

# **திருப்பாவை உவமைகள் 26**

*ஆனைக்குப்பாடுவாரைப் போலே*
வேண்டுவன கேட்டியேல்..மூவாயிரப்படி.

பஞ்சலக்ஷம்ுகுடிப் பெண்கள் கண்ணபிரான் எதிரே வந்து நிற்க , அவன் இவர்களைப் பார்த்து மயங்கி இருக்க , தட்டி எழுப்புக்கிறார்கள்.

இவர்கள் கண்ணிலும்,முலையிலும், இடையிலும் அவன் துவக்குண்டிருந்தான்.அதாவது இவர்கள் அசாத்தியமான ஞான , பக்தி, வைராக்கியத்தில் மயங்கி பேசாதிருந்தான் என்றபடி.அதிலிருந்து அவனை தட்டி எழுப்பி
கேட்டியேல்..என்று நாங்கள் சொல்வதைக் கேள் என்கிறார்கள்.

உள்ளுறைப்பொருளான ஸ்வாபதேசதம் .முலை பக்தியையும், கண் ஞானத்தையும், இடை வைராக்கியத்தையும் குறிக்கும்
இதற்கு *ஆனைப்புக்காடுவாரைப் போல* என்று ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை தெரிவிக்கிறார்.

ஆனைபுக்கு ஆடுதல்..சதுரங்கம். Chess.

இதில் ஈடுபடுவோர்,அதிலேயே மயங்கி , உலகையே மறந்திருப்பர்கள் என்றபடி.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

***திருப்பாவை உவமைகள் 27***

*நம் பெருமாள் திருநாள் என்று பேரை இட்டு..ஶ்ரீவைஷ்ணவர்களைத் திரட்டிக் காணுமாப் போலே*

கூடியிருந்து குளிர்ந்து..மூவாயிரப்படி

நம்பெருமாள் திருநாள் என்று பேரிட்டு , ஶ்ரீவைஷ்ணவர்கள் திரண்டு கூடியிருந்து குளிருமாப் போலே.

*ஹாரத்தை பிராட்டியும் கூட இருந்து பூட்டினாற் போல்*

நாடு புகழும் பரிசினால்ன்..மூவாயிரப்படி

இந்த இடைப்பெண்கள் நாடு புகழும் பரிசு என்பது தக்க பரிசு வேண்டும்.நாடு புகழனும்.

இது எப்படியென்னில், சக்கரவர்த்தித் திருமகன் பிராட்டியுடன் இருக்கையில,ு திருவடிக்கு ஹாரம் பரிசளித்தது , எல்லோரும் கொண்டாடினாற் போல்.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

## திருப்பாவை உவமைகள்..28

*பிஷக்கின் முன்பு வ்யாதியஸ்தன் தான் பண்ணிய அபத்யங்கள் சொல்லி அந்த வ்யாதிகளைத் தீர்த்துக் கொள்ளுமாப் போலே*

ஆறாயிரப்படி...கறவைகள் பின்

மருத்துவரிடம் பொய் சொல்லாதே என்று அடிக்கடி சொல்வதுண்டு.

மருத்துவரிடம் சென்றால், தான் செய்தவற்றை ஒளிக்காமல்,மறைக்காமல் சொல்லி, தன் நோயைத் தீர்த்துக் கொள்ளுமாப் போலே இவர்க்ளும் தங்கள் குறைகளை கண்ணனிடம் விண்ணப்பிக்கிறார்கள்.

மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன்,இப்பிறவியென்னும் நோயைத் தீர்ப்பானிறே!

இவர்களும் தாங்கள் கைம்முதலில்லாமையும், சாக்ஷாத் தருமம் அவனை உடையோம் என்றும்,சிறு பேர் அழைத்தமைக்கு ஷ்மாபனம் கேட்டு கோவிந்த பட்டாபிஷேகம் செய்கிறார்கள் , கறவைகள் பின் சென்றில்.

*பெருமாள் கடலைத் தூர்த்து வானர சேனையை நடத்தினாற போலே*ஂ குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா.ஆறாயிரப்படி

சக்கரவர்த்தித் திருமகன், மலையதனால் அணை கட்டி, அந்த கடலில் இருக்கும் மேடு பள்ளங்களை சமன் செய்து, வானர சேனையீ நடத்தினாற் போலே,

எம்பெருமான் அடியார்களின் குறைகளை நீக்கி, சமண் செய்து கொடுக்கிறான்..

அவன் நிறைந்த நம்பி, குறை ஒன்றும் இல்லாதவனிறே!

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

***திருப்பாவை உவமைகள் 29***

*இளைய பெருமாள், காட்டிலும்,படை வீடிலும் ஒக்கத் திரிந்தாற் போலே*

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்..ஆறாயிரப்படி

எத்தைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று பாரித்தாள் ஸ்ரீ ஆண்டாள்.

இது எப்படியென்னில், இளைய பெருமாள், காட்டிலும் சரி, அயோத்தியிலும் சரி, கூட இருந்து ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி அடிமை செய்ததோடு ஒக்கும்.

அதாவது, இடம் முக்கியம் அல்ல, கைங்கர்யம் ப்ர்தானம் என்றபடி.

இது *இளைய பெருமாள், காட்டிலும் படை வீட்டிலும் ஒக்கத் திரிந்தால் போலே*

தாசன்
வானமாமலை பத்மனாபன்

---

**திருப்பாவை உவமைகள் 30**

*மாதாவின் முன்பு ப்ரஜைகள் செய்த குற்றம் பிதாவுக்குத் தோன்றாதாப் போலே*

ஆறாயிரப்படி.. வங்கக் கடல் கடைந்த *மாதவன்*

தாய் அருகில் இருந்தால், குழந்தைகள் செய்யும் தவறுகள் தந்தைக்கு பெரிதாகப் புலப்படாதாப் போலே,

பிராட்டி சன்னிதியில், ஜீவன்கள் செய்யும் அபத்யங்கள் புலப்படா என்றபடி.

இதற்கு அடி, எவ்வுயிர்க்கும் தாயான பிராட்டி தன் புருஷகார பலத்தாலே எம்பெருமானின் ஸ்வாதந்தர்யத்தை தலைசாயப் பண்ணி, அவன் வாத்சல்யம் முதலான குணங்களைத் தலையெடுக்கச் செய்கை.

அதாவது, பிராட்டி ஜீவாத்மாக்களுக்காகப் பரிந்து பேசும் காரணத்தால் , அவள் சன்னிதியில் இவர்கள் பிழைகள் எம்பெருமானுக்குத் தோன்றாதிறே!

*பொன்னும்,மணியும்,முத்தும் செய்த ஆபரணம் போலே*

அணி புதுவை..ஆறாயிரப்படி

அணி புதுவை.ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு எது அணிகலன்?

பொன்னும் , மணியும், முத்தும் செய்த ஆபரணம் போலே,

ஸ்ரீவில்லிபுத்தூருக்கு,
பெரியாழ்வாரும், வடபெருங்கோயிலானும் தான்.

தாசன்

வானமாமலை பத்மனாபன்

---

## *திருப்பாவை உவமைகள்*

கடந்த மாதம் முழுவதும் திருப்பாவை வ்யாக்யானங்களில் பதிக்கப்பாட்ட சில உவமைகளை அனுபவித்து வந்தோம்.

மணிப்ரவாள நடை, உபனிட இதிஹாச புராணங்களில் மேற்கோளிடுதல், ஐதிஹ்யங்கள், உவமைகள், சங்கதி, அவதாரிகை, வக்துரு வைலக்ஷ்ணம், விஷய வைலக்ஷ்ணம், ப்ரபந்த வைலக்ஷணம், ரகசியார்த்தங்கள், தத்வார்த்தங்கள் இன்னும் பல மேன்மையான விஷயங்களை உள்ளடக்கியது நம் வ்யாக்யாங்கள்.

இதில் *உவமைகள*ௗ சொல்ல வந்த கருத்தை எளிமையாக எல்லோருக்கும் எடுத்துச் செல்ல உதவும்.

இந்த ஷைலியை வெகு நேர்த்தியாகக் கையாண்டது ஸ்ரீ நம்பிள்ளை.

இந்த உவ்மைகள் அன்றாட வாழ்வில் வழக்கில் நடையாடுவதால் எல்லொருக்கும் புரிந்து கொள்ள் பாலமாக அமைவது மட்டுமின்றி, அன்றைய நடப்பு, பழக்க வழக்கங்கள் தெரிந்து கொள்ளவும் பெரிதும்
.
திருப்பாவை வ்யாக்யானங்கள் ,- வ்யாக்யானச் சக்கரவர்த்தி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் *மூவாயிரப்படி*யிலிருந்தும்,

ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் *ஆறாயிரப்படி*யிலிருந்தும் கையாளப்பட்டிருக்கும் உவமைகள் சிலவற்றை நுகர்ந்தோம்.

இந்த பூர்வாசார்யர்களின் க்ரந்தகள் ஒப்பிலா உரைகள்.இவைக்குள் *ஒப்புக்கள்* இருக்குமேயன்றி இவற்றுக்கு *ஒப்பு* இல்லை.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

அடியேன் ராமானுஜ தாசன், வானமாமலை பத்மனாபன்